VAYAVILAN CENTRL COLLEGE - VAYAVILALN
UNIT EXAM NO :- 01/A/L/2020
அலகுப்பரீட்சை – கணக்கீட்டுச் சமன்பாடு

| 33 | T | I,II |
|---|---|---|

BY :- Mr V.S.Kumaran B.Com (Acc) Spl    கணக்கீட்டு அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv.Level) Examination, August 2020

# Accounting I II
# கணக்கீடு I II

A/L 2020
அலகு மாதிரிப் பரீட்சை

தேர்ச்சி 01, 02,

இல 01

**27.04.2020**

2.00 மணி

பகுதி I

Q 1) நிதிக் கணக்கீடு தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது/ எவை? (……)
A - இது அக்கறையுடையோருக்கு தகவல் வழங்குகின்றது
B - இது நிதியாண்டுக்கு பல தடைவை தயாரிக்கப்படும்
C - இது சட்டக் கட்டுப்பாடுகளை கொண்டது.
D- இது வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாக்கொண்டது

1) ABC 2) CD 3) AB 4) ABD 5) ACD

Q 2) Q 63) 15% VAT உட்பட ரூ 69000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு இதில் 2/3 பகுதி (15%VAT உட்பட) 92000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது இதில் (15%VAT உட்பட) மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்துள்ள சரியான இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு? (…….)

| | சொத்து | உரிமை | பொறுப்பு |
|---|---|---|---|
| 1) | 112000 | 40000 | 72000 |
| 2) | 102000 | 35000 | 67000 |
| 3) | 121000 | 40000 | 81000 |
| 4) | 112000 | 38000 | 74000 |
| 5) | 121000 | 29000 | 92000 |

Q3) ராம் நிறுவனத்தின் 1.4.2019 இல் சொத்து , பொறுப்பு முறைறையே ரூ 320000, ரூ 180000 ஆகும் ஆண்டுக்கான தேறிய நட்டம் ரூ 12000 ஆண்டுக்கான மேலதிக மூலதனம் பற்றுக்கள் முறையே ரூ 15000, ரூ 5000 ஆகும் 31.3.2020 இல் மொத்தச் சொத்து ரூ 480000 எனின் இத்தினத்தில் உள்ள பொறுப்பு யாது? (……)

1) ரூ 372000 2) ரூ 352000 3) ரூ 332000 4) ரூ 348000 5) ரூ 342000

Q4) கீர்த்தி நிறுவனம் ரூபா 75000 பட்டியல் விலையில் 20% வியாபாரக்கழிவில் பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு இதில் ரூ 5000 பண்டங்கள் வழங்குனரக்கு திருப்பப்பட்டு செலுத்தவேண்டிய தொகையில் 4/5 பகுதி 10% கழிவு தள்ளி உரிமையாளரால் தனது சொந்தப்பனத்திலிருந்து செலுத்தப்பட்டது இதனை பிரதிபலிக்கும் இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்து | = | உரிமை + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1) | 48000 | = | 8000 + | 40000 |
| 2) | 55000 | = | 44000 + | 11000 |
| 3) | 15400 | = | 4400 + | 11000 |
| 4) | 36000 | = | 24000 + | 12000 |
| 5) | 15400 | = | 15400 + | 11000 |

Q5) நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு

A – காசுப்பெறுவனவு நாளேட்டில் பதிதல்

B – காசுவிற்பனை

C – பற்றுச்சீட்டு தயாரித்தல்

D – விற்பனைக் கணக்கு

E – வருமானக்கூற்று தயாரித்தல்

சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக. (……….)

1) CAEDB 2) BCAED 3) DCAEB 4) BCADE 5) BACDE

Q6) ரமணன் நிறுவனத்தின் 31.3.2020 இல் சொத்து ரூ 400000 பொறுப்பு ரூ 150000 ஏப்பிரல் மாத தகவல்கள் வருமாறு

15.4 ரூ 12000 பண்டங்கள் ரூ 25000 பட்டியல் விலையில் 20% வியாபாரக்கழிவில் கடனுக்கு விற்கப்பட்டது.

20.4 கடன்பட்டோனால் 5000 பண்டம் திருப்பப்பட்டது

25.4 இம்மாத தேறிய விற்பனை தொடர்பில் வரவேண்டிய தொகையில் 2/3 ம் 10% கழிவு தள்ளி காசு பெறப்பட்டது.

30.4 ரூ 8000 மீதியை உடைய வருமதியாளர் தான் செலுத்தவேண்டிய ரூ 6000 சென்மதி தொகை மீதிக்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டது

30.4.2020 இல் உள்ள சரியாய மீதிகள் யாது?

| | சொத்து | பொறுப்பு | தேறிய சொத்து |
|---|---|---|---|
| 1. | 422000 | 142000 | 280000 |
| 2. | 399000 | 144000 | 255000 |
| 3. | 397000 | 142000 | 255000 |
| 4. | 401000 | 144000 | 255000 |
| 5. | 398000 | 144000 | 253000 |

Q7) 31.3.2020 இல் முடிவடைந்த மாத இறுதியில் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு காணப்பட்டது. (……)

சொத்து = உரிமை + சென்மதி

110000 = 71000 + 39000

மார்ச் மாதத்தில் பின்வரும் தகவல்கள் இடம்பெற்றன.

- மின்சாரப்பட்டியல் ரூபா 5000 கிடைக்கப்பெற்றது.
- வெளித்திரும்பிய சரக்கு ரூ 3000
- பெப்ரவரி மார்ச், ஏப்பிரல் மாதங்களுக்குரிய வாடகையாக ரூ 9000 மார்ச் இல் செலுத்தப்பட்டது.
- உட்திரும்பிய ரூபா 4000 பொருளின் கிரயம் 3000 ஆகும்.

மேற்படி சம்பவங்கள் இடம்பெறமுன்னுள்ள 1.3.2020 இல் உள்ள கணக்கீட்டு சமன்பாடு யாது?

| | சொத்து | = | உரிமை | + | சென்மதி |
|---|---|---|---|---|---|
| 1) | 117000 | = | 77000 | + | 40000 |
| 2) | 124000 | = | 86000 | + | 38000 |
| 3) | 130000 | = | 90000 | + | 40000 |
| 4) | 140000 | = | 90000 | + | 50000 |
| 5) | 120000 | = | 80000 | + | 40000 |

Q8) நடைமுறையல்லாச் சொத்து ரூ 40000 வால் அதிகரிக்க நடைமுறைப்பொறுப்பு ரூ 10000 அதிகரிக்க நடைமுறைச்சொத்து ரூ 30000 ஆல் குறைவடைய நடைமுறையல்லாப்பொறுப்பு ரூ 20000 குறைவடைய உரிமையாளரால் ரூபா 15000 மேலதிக மூலதனத்தை ஈடுபடுத்தியதுடன் ஆண்டுக்கான பற்று ரூபா 5000 எனின் ஆண்டுக்கான தேறியலாபம் அல்லது நட்டம் யாது? (…..)

1) ரூ 10000 2) ரூ 20000 3) ரூ (10000) 4) ரூ (20000) 5) ரூ (15000)

Q9) கணக்கீட்டுச் சமன்பாடு தொடர்பில் சரியான கூற்றை தெரிவுசெய்க

A- சொத்துக்கள் மாறாத நிலையில் பொறுப்பில் ஏற்படும் அதிகரிப்பு எப்போதும் உரிமையில் குறைறைவை ஏற்படுத்தும்

B- உரிமை தேறிய சொத்துக்கு சமனாகும்

C- தேறிய சொத்தில் ஏற்படும் அதிகரிப்பு எப்போதும் இலாபத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும்

D- உரிமையாளர் தனது சொந்தப்பணத்திலிருந்து நிறுவன செலவு மேற்கொண்டால் நிறுவன சொத்தும் பொறுப்பும் மாறாது.

1. A B C 2. BD 3. AD 4. ABD 5. ACD

Q10) 2020 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்தப்பட்ட தேறிய சம்பளம் ரூ 18000 ஊழியர் சேமலாபநிதிக்கு(EPF) ஊழியர் 10% மும் தொழில்கொள்வோன் 15% பங்களிப்பு செய்கின்றனர் ஊழியார் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில்கொள்வோன் பங்களிப்பு செய்கின்றனர். 5% ஒவ்வொருமாத பங்களிப்பும் அடுத்தமாதம் செலுத்தப்படுகின்றது. ஜனவரி மாத சொத்து பொறுப்பு உரிமையில் ஏற்படும் தேறிய தாக்கம் யாது?

| | சொத்து | உரிமை | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | (23000) | (23000) | - |
| 2. | (24000) | (18000) | (6000) |
| 3. | (18000) | (23000) | 5000 |
| 4. | (18000 | (13000) | (5000) |
| 5. | (18000 ) | (24000) | 6000 |

**11~15 வரையான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

Q 11) கீழேதரப்பட்ட தகவல்களை பயன்படுத்தி 1.4.2019 இல் சேரன் வியாபாரத்தின் தேறிய சொத்தின் பெறுமதியை கணிக்குக.

| | |
|---|---|
| 31.3.2020 இல் தேறிய சொத்துக்கள் | 420000 |
| தேறியநட்டம் | 35000 |
| பற்றிய காசு | 5000 |
| மேலதிக மூலதனம் | 10000 |

1.4.2019 இல் தேறிய சொத்து ………………………………………………………………

Q 12) 2020 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்தப்படவேண்டிய ரூ 20000 சம்பளத்திற்கு நிறுவனம் ரூ 15000 கிரயமான பண்டங்களை வழங்கி அவரது கணக்கை தீர்த்துக்கொண்டது இந்த நடவடிக்கை சொத்து, பொறுப்பு உரிமை என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை எடுத்துக்காட்டுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

Q 13) அ) கணக்கீட்டுச் சட்டகத்தின்படி பொறுப்பின் பண்புகள் 3 தருக?

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

ஆ) பின்வரும் ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒரு உதாரணம் தருக.
பொறுப்பு அதிகரிக்க உரிமை குறைதல்

………………………………………………………………………………

இ) உரிமை அதிகரிக்க உரிமை குறைதல்

………………………………………………………………………………

Q14) அ) பின்வரும் அடிப்படையில் நிதிக் கணக்கீட்டையும், முகாமைக் கணக்கீட்டையும் வேறுபடுத்துக.

| அடிப்படை | நிதிக் கணக்கீடு | முகாமைக் கண்கீடு |
|---|---|---|
| 1. சட்டத்தேவை | ……………………… | …………………………… |
| 2. அறிக்கையிடும் காலம் | ……………………….. | …………………………… |
| 3. அறிக்கை பயன்படுத்துவோர் | ……………………….. | ……………………………… |

ஆ) 15% VAT உட்பட ரூ 92000 கொள்வனவு செய்யப்பட்டபொருட்கள் 15% VAT உட்பட ரூ 184000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது. அதன்போது ரூ 2000 விளம்பரச்செலவு ஏற்பட்டது மேற்படி சம்பவத்தால் தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

……………………………………………………………………………………………………

Q15) வரையறுத்த காந்தி கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தகவ்கள்

A - எதிர்மாற்றல் ரூ 4000

B – கடன் விற்பனை ரூ 50000 இவை கிரயத்தில் 25% இலாபம் பெறக்கூடிய வகையில் விற்கப்பட்டது.

C – விற்பனைத் திரும்பல் ரூ 2500

D – வருமதி முதலீட்டு வருமானம் 5000

அ) 31.3.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான இலாபம் யாது? …………………………

ஆ) 31.3.2020 இல் சொத்து யாது? ………………………………………………

(15x3 ) 45 புள்ளிகள்

## பகுதி II

**வினா 01**

ஜெயம் நிறுவனத்தின் 1.5.2020 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று வருமாறு

| விபரம் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்து | | | |
| மோட்டார் | 400000 | (40000) | 360000 |
| | | | |
| நடைமுறைச்சொத்து | | | |
| இருப்பு | | 52000 | |
| கடன்பட்டோர் | | 38000 | |
| வங்கி | | 150000 | 240000 |
| | | | <u>**600000**</u> |
| உரிமையாண்மை | | | |
| மூலதனம் | | | 400000 |
| | | | |
| நடைமுறையல்லாப்பொறுப்பு | | | |
| 12% வங்கிக்கடன் | | | 120000 |
| நடைமுறைப்பொறுப்பு | | | |
| கடன்கொடுநா | | 78000 | |
| சென்மதி சம்பளம் | | 2000 | 80000 |
| | | | <u>**600000**</u> |

2020 மே மாதத்திற்கான தகவல்கள்

3.5 40000 பண்டங்கள் 10% வியாபாரக்கழிவில் கொள்வனவு செய்யப்பட்டது இதில் 1/3 பகுதி காசோலை செலுத்தப்பட்டதுடன் மிகுதி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

5.3 ரூ 15000 கிரயமான பண்டங்கள் ரூ 25000 கடனுக்கு விற்கப்பட்டது வியாபாரக்கழிவு 20%

8.3 கடன்பட்டோனால் திருப்பியது ரூ 2000 (5.3 இல் விற்கப்பட்டது)

12.5 மே மாதத்திற்கு கிடைக்கப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூ 2000

15.5 மோட்டார் ரூ 60000 வங்கிக்கடன் மூலம் பெறப்பட்டது.

18.3 கடன்கொடுநருக்கு திருப்பியது 2000

20.5 ஜனவரி மாத வருமதி தரகு ரூ 5000

22.5 உடமையாளர் பற்றிய காசு ரூ 4000

24.5 இல் மீதியாகவுள்ள கடன்கொடுநரில் ½ பகுதியினருக்கு 10% கழிவுதள்ளி காசோலை செலுத்தப்பட்டது.

28.5 மே மாதத்தில் செலுத்தப்பட்ட ரூ 8000 சம்பளத்தில் சென்றமாத அட்டுறு சம்பளமும், யூன்மாத சம்பளம் ரூ 3000 மும் மிகுதி இம்மாத சம்பளமும் உள்ளடங்கியுள்ளது.

<u>**மேலதிக தகவல்கள்**</u>

1) மோட்டாருக்கு 12% தேய்விடுக.
2) மே மாத வங்கிக்கடன் வட்டி சென்மதியாகவுள்ளது.
3) கடன்பட்டோரால் நேரடியாக வங்கியில் வைப்பிலிட்டது ரூ 10000 மே மாத வங்கிக்கட்டனம் ரூ 500
4) இறுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாட்டை மேற்கொள்க.
5) 31.5 இல் உள்ள இருப்பில் ரூ 4000 பழுதடைந்த பண்டங்கள் அடங்கியுள்ளது இதனை ரூ 3000 மதிப்பில் இருப்பில் எடுக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

1) முதல் 10 கொடுக்கல் வாங்களையும் (3.5 – 28.5 வரை) கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செயது காட்டுக
   மோட்டார் + இருப்பு + வியாபாரவருமதி + ஏனைய வருமதி + காசு = மூலதனம் + வங்கிக்கடன் + வியாபாரசென்மதி + ஏனைய சென்மதி + நிறுத்திவைத்தலாபம்
2) மே மாதத்திற்கான வருமானக்கூற்று
3) 31.5 இல் உள்ளவாறான பின்வரும் மீதிகள்
   அ) தேறிய சொத்து
   ஆ) வியாபார வருமதிகளின் முன்கொண்டுவரும் தொகை
   இ) பொறுப்பு

4) மே 5, மே 8 இல் இடம்பெற்றற கொடுக்கல் வாங்கலையும், மேலதிக தகவல்களையும் கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செய்து காட்டுக

மோட்டார் + இருப்பு + வருமதி + காசு = உரிமை + சென்மதி + (வருமானம் - செலவு)

( 35 புள்ளிகள்)

**வினா 02**

ராகவி நிறுவனத்தின் 2020/5/31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொடுக்கல் வாங்கலகள் கீழ்வரும் சமன்பாட்டில் தரப்பட்டுள்ளளது.

| கொடு.வா | பொறி | இருப்பு | வியாபார வருமதி | காசு | = உரிமையாண்மை | கடன் | வியாபார சென்மதி |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 250000 | 50000 | 40000 | 60000 | 320000 | - | 80000 |
| 1 | +50000 | | | | | + 50000 | |
| 2 | | +15000 | | -15000 | | | |
| 3 | | | -8000 | +6000 | - 2000 | | |
| 4 | | | -1500 | | -1500 | | |
| 5 | | | | -2000 | -2000 | | |
| 6 | | +1000 | -1500 | | *-500* | | |
| 7 | | -1000 | | | -1000 | | |
| 8 | | | | -5000 | -1000 | -4000 | |
| 9 | | | | | *+10000* | | -10000 |
| 10 | | -6000 | *+15000* | | *+9000* | | |

உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் 5,9 ஆம் கொடுக்கல் வாங்கல் தவிர ஏனைய ஒவ்வொரு கூடுதல் அல்லது குறைதலும் தேறியலாபத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

மேலதிக தகவல்

1) பொறிக்கு 6 % தேய்விடப்பட்டது
2) கடனபட்டோர் நேரடிவைப்பு ரூ 10000
3) நிலையியற்கட்டளை வாடகை ரூ 2000 அட்டுறு மின்சாரம் ரூ 1000
4) இறுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு

**வேண்டப்படுவது :-**

1) **முதல் 10 கொடுக்கல் வாங்கல்களையும் விபரிக்குக.**
2) **தேறிய சொத்தை அடிப்படையாககொண்டு தேறியலாபத்தை கணிக்குக.**
3) **31.5 இல் கடன்பட்டோர் முன்கொண்டுவரும் மீதி, பொறியின் முன்கொண்டுவரும் தொகை யாது?**

**(20 புள்ளிகள்)**

## பெற்றோர் ஆசிரியர்களின் கவனத்திற்கு……..

க.பொ.த உயர்தர 2020 மாணவர்களுக்கு கணக்கீடு தொடர்பான 10 அலகுப் பரீட்சைகள் தொடச்சியாக என்னால் வெளியிடப்படுகின்றது. இதனை மாணவர்ளுக்கு கிடைப்பதை உறுதி செய்து அவர்கள் இப்பரீட்சையை நிறைவாக செய்வதனை உறுதிசெய்து மாணவர்கள் பயன்பெற ஒத்துழைக்கவும்.

நன்றி